NP

**ஆசிரியர்தேர்வுவாரியம்**

**<u>பத்திரிக்கைச்செய்தி</u>**

**தமிழ்நாடு கல்லூரிக் கல்வியியல் பணிகளின் கீழ் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசுக் கல்வியியல் கல்லூரிகளுக்கான உதவிப்பேராசிரியர் பணியிடங்கள்– 2025 இறுதி விடைக்குறிப்பு மற்றும் மதிப்பெண்கள் வெளியீடு**

---------

தமிழ்நாடு கல்லூரிக் கல்வியியல் பணிகளின்கீழ், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசுக் கல்வியியல் கல்லூரிகளுக்கான உதவிப் பேராசிரியர் நேரடிநியமனத் தெரிவு பணிகள்-2025 சார்ந்த அறிவிப்பு எண்: 04/2025, நாள்: 16.10.2025-இன்படி, எழுத்துத் தேர்வு 27.12.2025 அன்று ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்டது. இத்தேர்விற்கு விண்ணப்பித்த 47,047 விண்ணப்பதாரர்களுள் 42,064 விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் கலந்து கொண்டனர்.

இவ்வாரிய இணையதளத்தில் Part A & B-க்கான உத்தேச விடைக்குறிப்பை Objection tracker உடன் 05.01.2026 அன்று இவ்வாரியத்தால் வெளியிடப்பட்டது. விண்ணப்பதாரர்களிடமிருந்து 05.01.2026 முதல் 13.01.2026 வரை ஆட்சேபனை மனுக்கள் பெறப்பட்டன.

மனுதாரர்களால் உரிய ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆட்சேபனை மனுக்களும் பாட வல்லுநர்களால் முழுமையாகப் பரிசீலிக்கப்பட்டு, இறுதி விடைக்குறிப்பு (Final Answer Key) தயாரிக்கப்பட்டு, 25.06.2026 அன்று ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. பாட வல்லுநர்களால் வழங்கப்பட்டுள்ள விடைக்குறிப்பே இறுதியானது ஆகும்.

இது சார்ந்த எந்த ஆட்சேபனை கோரிக்கை மனுக்களும் இவ்வாரியத்தால் ஏற்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இறுதி விடைக் குறிப்பின் அடிப்படையில் வினாத்தாட்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, தேர்வு எழுதிய அனைத்து விண்ணப்பதாரர்களின் மதிப்பெண்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

பணி அனுபவத்திற்காக மதிப்பெண் கோரும் விண்ணப்பதாரர்களுக்கு அதற்கான மதிப்பெண். அசல் ஆவணங்கள் மதிப்பீடு குழுவால் அசல் ஆவணங்கள் சரிபார்ப்பிற்கு பின் வழங்கப்படும்.

அசல் ஆவணங்கள் சரிபார்ப்பின் போது, அசல் கல்விச் சான்றிதழ்கள், பணி அனுபவ சான்றிதழ், பல்கலைக் கழகங்களால் வழங்கப்பட்ட இளங்கலை மற்றும் முதுகலை கல்வித் தகுதிகளுக்கான இணைத்தன்மை அரசாணை, M.Phil/Ph.D ஆகிய கல்வித் தகுதிகள் தொடர்பான Relevance சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் தலைமையிலான நிபுணர் குழவினால் அனைத்து அசல் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு இந்நிபுணர் குழவினால் பணி அனுபவத்திற்காக வழங்கப்படும் மதிப்பெண்கள் மட்டுமே இறுதியானதாகும். அசல் ஆவணங்கள் சரிபார்ப்பிற்குப் பின்னர் அளிக்கப்படும் ஆவணங்கள் மற்றும் கோரிக்கை மனுக்கள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அசல் ஆவணங்கள் சரிபார்ப்பிற்கான இடம் மற்றும் தேதி 'குறித்த விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தேதி: 25.06.2026 தலைவர்